தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-5-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**அறுவடை செய்யும் மக்காச்சோளத்திற்கு நல்ல விலை கிடைக்கும்**

வேளாண் மற்றும் கூட்டுறவு துறையின் இரண்டாம் முன்கூட்டிய மதிப்பீட்டின் படி 2015 -16 ஆம் ஆண்டில் மக்காச்சோளம் 9 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 21 மில்லியன் டன்கள் உற்பத்தி ஆகும் என்று வெளியிட்டுள்ளது. இது 2.17 சதவிகிதம் மக்காச்சோளம் பரப்பளவிலும் 13.11 சதவிகிதம் உற்பத்தியிலும் கடந்த ஆண்டை காட்டிலும் குறைவானதாகும். கர்நாடகா, ஆந்திரபிரதேசம், தெலுங்கானா, பீகார், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகியவை மக்காச்சோளம் விளைவிக்கும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில் திருப்பூர், திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகியவை மக்காச்சோளம் விளைவிக்கும் முக்கிய மாவட்டங்களாகும்.

அமெரிக்கா ஐக்கிய நாடுகள் வேளாண்துறையின்படி, மக்காச்சோளம் இந்தியாவில் விதைக்காக ஒரு சதவிகிதமும், 42 சதவிகிதம் கோழி தீவனத்திற்கும் மீதம் 57 சதவிகிதம் மாவு, மாட்டுத்தீவனம் மற்றும் இதர தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் விளையும் மக்காச்சோளம் நமது தேவையில் 50 சதவிகிதத்தை மட்டுமே பூர்த்தி செய்கின்றது. மேலும் நிலவும் தேவையை பூர்த்தி செய்ய கர்நாடகா, ஆந்திரபிரதேசம், தெலுங்கானா மற்றும் பீகாரிலிருந்து மக்காச்சோளம் பெறப்படுகின்றது. கோழி நிறுவனங்கள் ஏப்ரல் மாதம் மத்தியிலிருந்து பீகாரில் உள்ள மக்காச்சோளத்தை வாங்க ஆரம்பித்துள்ளனர். இந்த வருடம் பீகாரிலிருந்து வரும் மக்காச்சோளத்தின் தரம் உயர்ந்துள்ளதால் அதனை கோழி தீவனமாக பயன்படுத்தலாம் என வணிக தரப்பினர் கூறியுள்ளனர். எதிர்கால தேவைக்காக சிறிது மக்காச்சோளத்தை வியாபாரிகள் மற்றும் கோழி நிறுவனங்கள் சேமித்தும் வைத்துள்ளனர்.

பீகாரில் கடந்தாண்டை விட விளைச்சல் அதிகமாக இருப்பதும், நம் நாட்டின் தேவை அளிப்பு இடைவெளியை ஈடுசெய்ய உக்ரைன் மற்றும் பிரேசில் நாட்டிலிருந்து மக்காச்சோளம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதும் விலை நிலையாக இருப்பதற்கு காரணமாகும்.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளைஎடுக்க ஏதுவாக கடந்த 13 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய மக்காச்சோள விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான மக்காச்சோளத்தின் பண்ணை விலை கோடை காலத்தில் குவிண்டாலுக்கு ரூ.1,400 - 1,500 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின்படி மக்காச்சோளத்தை விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி- 0422-2431405

<u>தொழில் நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறுதானியங்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசிஎண் :- 0422-2450507

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்